**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்**

**மேட்டூர்.**

**OS.No**. 306/2015

**வழக்கு சாட்சி PW.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பழனிசாமி | கணவர் பெயர் | : ------ |
| தகப்பனார் பெயர் | நல்லப்பன் | வயது | : 72 |
| கிராமம் | ஓலைப்பட்டி | நாள் | : 24.02.2026 |
| தாலுகா | மேட்டூர் | | |
| மாவட்டம் | சேலம் | | |

இன்று 23.02.2026 ஆம் தேதியன்று சாட்சி இந்நீதிமன்றத்தில் சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டார்.

**<u>முதல் விசாரணை :</u>**

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். நான் இன்று தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டவையாகும். கீழ்க்கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்கிறேன்.

1. 18.08.1971 ம் தேதியிட்ட பதிவுசெய்யப்பட்ட கிரைய ஆவணம் அசல் **வா.சா.ஆ.1** ஆகும்.

2. ச.எண்.82/2B மற்றும் 83/2F க்குண்டான சொத்திற்கு என் தாயார் கந்தாயம்மாள் பெயரிலுள்ள பட்டா எண்.1015 கணினி பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.2** ஆகும்.

3. 06.07.2009 ம் தேதியிட்ட அ-பதிவேடு உண்மை நகல் **வா.சா.ஆ.3** ஆகும்.

4. 30.03.2008 ம் தேதியில் என் தாயார் கந்தாயம்மாள் பெயரில் செலுத்தப்பட்ட கந்தாய ரசீது அசல் **வா.சா.ஆ.4** ஆகும்.

5. 20.12.2014 ம் தேதியில் என் மகன் அண்ணாமலை மற்றும் என் பெயரில் பெயரில் செலுத்தப்பட்ட வீட்டுவரி ரசீதுகள் (எண்ணிக்கை 2) அசல் **வா.சா.ஆ.5** ஆகும்.

6. என் தாயார் தாசில்தார் அவர்களுக்கு 02.11.2015 ம் தேதியில் அனுப்பிய மனு கை நகல் மற்றும் தபால் ரசீது அசல் **வா.சா.ஆ.6** ஆகும்.

7. என் தாயார் அனுப்பிய மனுவானது தாசில்தார் அலுவலகத்தில் சார்வு செய்யப்பட்டதற்கான ஆதாரம் கணினி பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.7** ஆகும்.

8. நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை **நீ.மா.சா.ஆ.1** ஆகும்.

9. நீதிமன்ற ஆணையரின் மாதிரி வரைபடம் **நீ.மா.சா.ஆ.2** ஆகும்.

10. நீதிமன்ற ஆணையர் அறிக்கையுடன் தாக்கல் செய்த சர்வேயர் வரைபடம் **நீ.மா.சா.ஆ.3** ஆகும். (மேற்கண்ட ஆவணங்கள் அனைத்தும் உண்மைதம்மை மற்றும் தொடர்புடைமை குறித்த ஆட்சேபனையுடன் குறியீடு செய்துகொள்ளுமாறு 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் தெரிவித்ததன் பேரில் மேற்கண்ட ஆட்சேபனையோடு குறியீடு செய்யப்படுகிறது).

(குறுக்கு விசாரணைக்காக வழக்கு 16.03.2026 ம் தேதி ஒத்திவைக்கப்படுகிறது)

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.